தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 8-6-57 | சனிக்கிழமை | இதழ் 38

ம. பொ. சி. கவனத்திற்கு!

ஒரு வாரமோ அல்லது பத்து நாட்களோ, நாட்டிலே தன்னைப் பற்றிய பேச்சு இல்லாவிட்டால், மக்கள் மறந்துவிடுவார்கள் என்ற அச்சத்தில், தினசரி இதழ்களின் நிருபரை அழைத்து சில திடீர் புஷ்வாணங்களை விடுவதில், தமிழ்நாட்டைப் பொருத்த வரையில் முதல்வராகக் கருதப்படுபவர் ம. பொ. சிவஞானமாவார். உடல் சோர்வு, உள்ளச் சோர்வைப் பற்றி அவருக்கு அக்கரையில்லை. யாரும் எதிர்பாராத விதத்தில், 'போராட்டம் உருவாகிறது! தமிழர்களே தயாரா?'' என்று அறிக்கை விடுவார். பிறகு பத்து நாட்கள் கழித்து. 'தி. மு. க வுக்கு உடன்பாடுதானா?' என்று 'பலப் பிச்சை' கேட்பார். இப்படியே அவர், அரசியலில் மின்மினிப் பூச்சியாக இருந்து காலத்தைக் கடத்தி வருபவர். அதே அதிர்வேட்டு ஆயுதத்தை தேர்தல் முடிந்த தருணத்தில் பிரயோகித்துப் பார்த்தார். தி. மு. கழகத்திற்கும் கடவுள் கொள்கைக்குமுள்ள உறவை அறிஞர் அண்ணா அவர்கள் கூட்டங்களில் எடுத்துரைத்து வந்த காலை, ம. பொ. சி. ஒரு அறிக்கை விட்டார். 'அண்ணாத்துரை நாஸ்திகரல்ல என்றால் கோயிலுக்கு வரத் தயாரா?' என்று கேட்டார். புலவர்கள் சிரித்தார்கள்; புடம் போட்டு எடுக்கப்பட்ட அரசியல் வாதிகள் வெட்கப்பட்டார்கள். ''கோயிலுக்குப் பாதை தெரியாமல் அண்ணாதுரை திகைக்கவில்லை; உண்மைக் கடவுள், எந்த உருவில் எந்தக் கோயிலில் இருக்கிறார்; முதலில் அதைக் கூறு'' என்றுதான் அண்ணாதுரை கேட்கிறார், என படித்த மாற்றுக்கட்சித் தோழர்களே பேசிக்கொண்டார்கள். யாருடைய ஆதரவைப்பெற ம. பொ. சி. அண்ணாவை ஆலயத்திற்கு அழைத்தாரோ, அவர்களே அவருக்குப் பதில் தரும் வகையில் நடந்துகொள்வார்கள் என ம. பொ. சி. ஒருநாளும் எண்ணியிருக்கமாட்டார்.

தி. மு. க. வைச் சாடி, தன்னை வளர்த்துக்கொள்ள நினைக்கும் அவர், இந்த வாரம் ஒரு வர்ண மத்தாப்பைக் கொளுத்திவைத்து அந்த வர்ண வெளிச்சத்தில் தனது உருவத்தைத் தமிழகத்திற்குக் காட்டிக்கொள்ள முனைந்திருக்கிறார். நல்ல இருட்டில்கூட சாம்பல்பூத்த வெளிச்சம் உண்டு என்பதை ஆண்டாண்டு காலமாக உணர்ந்திருக்கும் தமிழ் மக்களை, வர்ண விளக்கின் அருகில் நின்று கவர நினைக்கும் ம. பொ. சி. யின் 'ராஜதந்திரம்' சாரமற்றது என்பதற்காக நாம் நமது வருத்தத்தை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். சண்டே அப்சர்வர் பி. பாலசுப்ரமணியம் அவர்கள், சென்னையில் நடைபெற்றுக் கொண்டு வரும் 'பிராமணாள் வார்த்தை அழிப்புப் போராட்டம்' பற்றித் தனது கருத்தை அவரது பத்திரிகையின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். அதையே தி. மு. கழகத்தின் கருத்தாக மக்கள் மன்றத்தில் பறைசாற்ற நினைத்து, அந்தப் பணியையே தற்காலிக அரசியல் திருப்பணியாக ம. பொ. சி. தனது 'செங்கோல்' இதழில் எழுதி வருகிறார்.

ஒரு கட்சியில் பற்றுக் கொண்ட ஒருவர், வேறொரு கட்சி நடத்தும் போராட்டம் பற்றி தனது கருத்தை வெளியிடும் உரிமையை எந்த ஜனநாயக இயக்கமும் அபகரித்துக் கொள்ளாது. 'அப்படியும் ஒரு கட்சி இருக்கிறது; அது என் தமிரசுக் கழகம்' என்று ம. பொ. சி. ஒப்புக்கொள்வாரானால் நாங்கள் ஆச்சரியப்படமாட்டோம். சர்வாதிகார ஜனநாயகக் கட்சியாக மின்னிக் கொண்டு வரும் காங்கிரஸ் கட்சியினின்று பிரிந்தோடி வந்தவர்களின் 'ஜோடனைக் கூடம்' தானே தமிரசுக் கழகம் என்று எண்ணி விடுவோம். ஆனால் தி. மு. கழகம்? நீதிபதிகளால் கூட, தீர்ப்புகளில் புகழப்பட்ட ஜனநாயக இயக்கம் அது என்பதை ம. பொ. சி. அறியமாட்டார்.

திரு பி. பா. அவர்கள், தான் இதுநாள் வரை பெரியாரின் கிளர்ச்சிகளை ஆதரித்து வந்ததற்கான காரணங்களை அவரது இதழில் விளக்கியிருப்பதோடு, இந்தப் போராட்டத்தில் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார். அது அவரது சொந்தக் கருத்து. அந்தக் கருத்துத்தான் தி. மு. க. வின் கருத்து என ம. பொ. சி. கருதுவாராயின், மனத்தாங்கலோடு தெரிவித்துக் கொள்கிறோம், தென்னாட்டின் மிகப்பெரிய இயக்கத்தின் கொள்கைகளையே அவரால் புரிந்து கொள்ள இயலாதுபோனது, அவரது அரசியல் துறவு விருப்பத்தையே காட்டுவதாகும். தாய்நாட்டின் அரசியல் கேந்திரத்தின் பற்சக்கரமாக விளங்க வேண்டுமெனத் துடிப்போர், அவர்களின் முன்னேற்றத்தைப் பாதிக்கச் செய்யும் எதிர்க்கட்சியின் கொள்கைகளை, சட்டதிட்டங்களை குறைவறக் கற்று அதில் ஓட்டை உடைசல்கள் இருந்தால் அவைகளை அங்கம் அங்கமாகப் பிரித்துக் காட்ட வேண்டும். அதுதான் முறையான அரசியல் வாதியின் மேலான செயலாகும். ம. பொ. சி. அவர்கள் தன்னை ஒரு அரசியல் வாதி என்று சொல்லிக் கொள்வதால், அவர் தனது கடமைகளில் பிரதானமானதைச் செய்யத் தவறிவிட்டார் என்பதை இங்கே சொல்லித்தான் ஆகவேண்டும்.

கண்ணதாசன்

''பார்ப்பனரைப் பற்றி அக்கரையில்லை; பார்ப்பனீயம் தான் ஒழிய வேண்டுமென தி. மு. கழகம் சொன்னபோதெல்லாம் 'சுயசிந்தனையாளர்'கள் கேலி செய்தார்கள். 'பாம்பு வாழட்டுமாம்! விஷம் மட்டும் கூடாதாம்' என்று இழிவாகப் பேசினார்கள். சிவஞானம் இதை மறந்திருக்க நியாயமில்லை.

''ஹிட்லர், ஒரு காலத்தில் யூதர்களை ஒழித்தே திருவேன் என்று முழங்கி, ஒரு சிலரைத் தீர்த்துக் கட்டினான். அவர்களில் தப்பித்தவர்கள், பிற்காலத்தில் புகழ் பெற்ற விஞ்ஞானிகளானார்கள். ஐன்ஸ்டீன் அவர்களில் முக்கியமானவர். இங்கே பார்ப்பனனே வெளியேறு என்று சொன்னால் ஐன்ஸ்டினைப்போல் பல அறிவாளிகளை இழக்க நேரிடும்; எனவே நாம் பார்ப்பனர்களது அனுஷ்டானங்களை ஒழிப்போம்'' என்று தி. மு. க. எழுத்தாளர்கள் எழுதியபோது, இவர்கள், 'இச'த்தை ஒழிக்கிறார்களாமே என கூவும் நதியில் எழுதுகோலைத் துவைத்துப் பதில் எழுதினார்கள். இதையும் ம. பொ. சி. மறந்திருக்கமுடியாது. மாற்றுக் கட்சிகளின் கடந்த காலச்செயல் முறைகளை நினைவுக்குக் கொண்டுவராமல் நிகழ்கால விமர்சனத்தில் அவர் இறங்கியிருப்பாரானால், இதுநாள் வரை நாம் அவரைப் பற்றி எண்ணியிருந்த பெரு நினைப்பை 'வாபஸ்' பெற்றுக்கொள்கிறோம்.

பி. பா அவர்களின் சொந்தக் கருத்தை மட்டும் பாலமாக அமைத்துக்கொண்டு, நெடுநாட்களாக தனக்கும் மக்களுக்குமிடையே ஓடிக்கொண்டிருக்கும் நெருப்பாற்றைக் கடந்து மக்களோடு கலந்துவிட ம. பொ. சி. துடிக்கிறார் என்றால், தி. மு. கழகத்தின் வலுவான கொள்கைகளும், அவை சம்பாதித்த மக்கள் சக்தியும் எந்த அளவுக்கு ம. பொ. சியையும் அவரது கொள்கைகளையும் உடைத் தெரிந்திருக்கின்றன என்பதை தமிழ் மக்கள் அறிவர்.

— 6-ம் பக்கம் —

முயலுக்கு மூன்று கால்!

சென்ற கிழமை டில்லியிலே அகில இந்தியக் காங்கிரஸ் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும் புள்ளிகளெல்லாம் கூட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய பிரச்சினைகள் — தலை போகும் சிக்கல்கள் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்ததையெல்லாம் அங்கே பேசியிருக்கிறார்கள். கட்சிக்குப் புதிய ரத்தம் பாய்ச்சும் திட்டத்திலிருந்து, மந்திரிமார்களின் சம்பளப் பிரச்சினைவரை பேசப்பட்டிருக்கின்றன. தென்னாட்டுத் தமிழ் தினசரிகளிலெல்லாம், நடந்து முடிந்த அ. இ. கா. க. கூட்டத்தின் மகிமைபற்றியும், அங்கே மலர்ந்த 'ஜனநாயகம்' பற்றியும் பிரமாதமாகப் புகழ்ந்து எழுதப்பட்டிருக்கிறது. 'தினமணி'தான் அந்தப் பத்திரிகைகளில் முன்னணியில் நின்று எழுதியிருக்கிறது

இதுவரை எந்தக் கூட்டத்திலும் இதுமாதிரியான காரசாரமான வாதம் நடந்ததில்லை என்று அந்த இதழ் குறிப்பிட்டிருக்கிறது. அப்படியென்ன அங்கே வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன ?

நேருவின் நெஞ்சழுத்தத்தைக் கண்டித்தனரா ?

மத்திய அரசு கையாளும் முரட்டுத்தனத்தைச் சாடினரா ?

பண்டிதர் அடிக்கடி வெளிநாட்டுக்குப் போகக் கூடாது என்று யாராவது கேட்டார்களா?

"பண்டாரநாயகாவோடு இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிப் பேச எனக்கு நேரமில்லை, நிகழ்ச்சி நிரலில் அது குறிப்பிடப்படவுமில்லை என்று அடமாகப் பேசிய நேருஜி அவர்கள், இங்கிலாந்து சென்றால், நிகழ்ச்சி நிரலில் இல்லாத நிகழ்ச்சியாக, லேடி மவுண்ட்பேட்டனை அன்னாரின் கிராமத்திற்குச் சென்று பார்ப்பதை சேர்த்துக்கொள்வது நியாயமா? என்று காமராசர் கேட்டாரா ?

ஆச்சாரியாரை மத்திய சர்க்கார் மதிப்பதில்லை, அவரது யோசனைகளை ஏற்பதில்லை என்று சுப்ரமணியம் கேட்டாரா? பிறகு என்னதான் காரசாரமான வாதம் நடைபெற்றது ?

கட்சி வளர்ச்சிக்குப் புதிய திட்டங்கள் ! சம்பளப் பிரச்சினை ! இவை இரண்டும் அங்கே பிரதானமாக எடுத்துக் கொள்ளப்பட்டு வாதிக்கப்பட்டனவாம் !

காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், சுய உரிமையோடு பேச முடிந்தது என்பதை இப்போது பெருமையோடு சொல்லிக் கொள்ள வேண்டிய அளவுக்கு அங்கே ஜனநாயகம், சமத்துவம் மலர்கிறது ! கேவலம் !! காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களையும், கட்சி அங்கத்தினர்களையும் மண்பொம்மைகளாக மதித்து வந்த காங்கிரஸ் தலைமைபீடம் இந்த அளவுக்கு விட்டுக்கொடுத்தது மகிழ்ச்சிக்குரியதெனலாம். ஆனால் கைதூக்கும் கட்டம் வருகையில் தங்களையுமறியாமல் கைகள் உயர்ந்துவிடுகின்றன என்கிறபோது பேசி முடித்த வாதங்கள், வாங்கிய கையொலிகள் அத்தனையும் பெட்டிப் பாம்புகளாகி விடுகின்றன.

ஆனால் டில்லிக் கூட்டத்தில் இதுவரை நடந்திராத நிகழ்ச்சியொன்று நடைபெற்றிருக்கிறது. காங்கிரஸ் கட்சியை சீர்திருத்தும் யோசனைகளை, பலர்— பழுத்த காங்கிரஸ்காரர்கள் பலமாக எதிர்த்திருக்கிறார்கள். நேருவே ஆதரித்தும் அதை முக்கியமானவர்கள் ஆதரிக்கவில்லை என தினமணி எழுதியிருக்கிறது. காங்கிரஸ் கமிட்டியில் நேருவின் கருத்துக்கு இருந்த பலமான எதிர்ப்பை, தமிழ்த் தேசிய ஏடுகள், காங்கிரஸ், ஜனநாயகத்திற்கு மதிப்பளித்தது என்று திரையிட்டு மறைக்க முயன்றிருக்கின்றன. உண்மை தான் என்ன ? வாக்கெடுப்புக்கு விட்டால் நேருவின் கை தாழ்ந்துவிடும் என்று எண்ணந்தான், காங்கிரஸ் சீர்திருத்த யோசனையைப் பரிசீலனை செய்ய, குழு ஒன்றை நியமித்திருக்கிறார்கள். அதை மட்டும் வாக்கெடுப்புக்கு விடாத மர்மம் என்னவோ !

இதுவரை இப்படி நடந்ததில்லையாம் ! இதுவரை யாரையும் பேச விட்டதில்லை; சந்தர்ப்பம் கிடைத்தது, காரணகர்த்தாவைப் பதம் பார்க்கிறார்கள் ! இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே ! இன்னும் கொஞ்சம் பிடிவாதம் செய்திருந்தால் கட்சிப் பரிசீலனை யோசனைகளும் நிறைவேறியிருக்குமாம் ! — இதையும் தினமணிதான் கூறியிருக்கிறது.

அடுத்தாற்போல் பண்டிதருக்கு அதே கூட்டத்தில் இன்னொரு 'குட்டு' விழுந்திருக்கிறது. மந்திரிகளின் சம்பளத்தைக் குறைக்கவேண்டும் என்ற தனி நபர் தீர்மானம் ஆறு ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியடைந்தாலும் 'ஜவகர்லால்ஜி'க்கு அது ஒரு பலமான 'அடி' என்பதை யாரும் ஒப்புக்கொள்ள மறுக்க மாட்டார்கள். நேரு பக்கம்தான் கைதூக்கியவர்கள் அதிகமென்றாலும் நேருவுக்கு அது பலமான தோல்வி தான். **"காகிதப்பூ மணக்காது காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது"** என்று தேர்தல் காலத்தில் நாம் சொன்னபோது, காமராசர் கூட கேலி பேசினார்; 'காகிதப்பூ மணக்காதுதான்' இது இவர்கள்தானா சொல்லவேண்டுமென்றார் அந்தப் 'பேராசிரியர்'. காங்கிரசைத்தான் இவர்கள் காகிதப்பூ என்று சொல்லியிருக்கிறார்கள் என்ற மெய்யை எடுத்தோத, காமராசருக்கு அருகில் யாருமில்லை !

அந்தப் பொன்னெழுத்துக்களை டில்லிக் கூட்டம் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது என்பதை 'மனிதப் பிறவி'கள் சிலர் கைதூக்கிக் காட்டி விட்டனர்.

உ. பி. யைச் சேர்ந்த பனார்சி தாஸ் என்பவர், காங்கிரஸ் மந்திரிகள் ஆயிர ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறக்கூடாது என்று கொண்டுவந்த தீர்மானம் ஆறு ஓட்டு வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இந்தத் தீர்மானம் பற்றி நேரு குறிப்பிடுகையில்,

"என் மாதச் சம்பளம் எவ்வளவு என்பது- எனக்குத் திட்டமாகத் தெரியாது. வருமான வரி போக எனக்கு மாதத்துக்கு ரூ. 1600 கிடைக்கிறது. அலகாபாதில் எனக்கு சொந்த வீடு இருக்கிறது. சில சமயம் நானும் என் பெண்ணும் அங்கு சென்று தங்குவதுண்டு. என் தகப்பனார் கால முதற்கொண்டே அங்கு தோட்டக்காரர் போன்றவர்கள் வசித்து வருகின்றனர். தோட்டக்காரரே அந்த வீட்டைப் பாதுகாத்து வருகிறார். அவர்களை வேலையிலிருந்து நீக்க நான் விரும்பவில்லை. இவர்களுக்காக நான் மாதத்திற்கு ரூ. 900 செலவிடுகிறேன். ஆகவே, என்னிடம் மிஞ்சியிருப்பது ரூ. 700. இதிலும் ரூ. 200 வரை பல்வேறு காங்கிரஸ் கமிட்டிகளுக்குச் சந்தாவுக்காக சென்றுவிடுகிறது. என் சொந்த உபயோகத்திற்கு மிஞ்சியிருப்பது ரூ. 500தான். க்ஷவர பிளேடுகள், பல்பசை போன்ற சொற்பமான தேவைகள் எனக்கு ஏற்பட்டிருந்த போதிலும் நான் இதைவிட அதிகம் செலவிடுகிறேன். புது டில்லியிலிருக்கும் என் வீடு ஜனாதிபதி எஸ்டேட்டில் ஒரு பகுதி. அது எனக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அது ஓட்டல் போன்றது. ஏனெனில் ஜனாதிபதி எஸ்டேட்டிலிருந்து உணவுக்காக பணம் செலுத்த எனக்கு பில் வருகிறது. ராஜாங்க விருந்துகளுக்கு ஆகும் செலவு சர்க்காரால் கொடுக்கப்படுகிறது. எனக்கும் என் பெண்ணுக்கும் மற்ற என் விருந்தினர்களுக்கும் நான் பணம் கொடுக்கவேண்டும்" என்று சொன்னார்.

எதிர்த்துப் பேச வேண்டும் என்ற வீம்பு மனோபாவத்திலேயே பண்டிதநேரு இவ்வாறு பேசியிருக்கிறார் என்பது நன்கு தெரியவருகிறது. தனக்குக் கிடைக்கும் வருமானத்திற்கு சரியாகக் கணக்குக் காண்பித்துவிட்டு, 'துண்டுவிழும் பட்ஜெட்'டை வேறு கடை விரித்துக் காட்டுகிறார்.

பண்டிதநேரு, கட்சிப் பிரச்சினையாக இருந்தாலும், அது மக்கள் பிரச்சினையாக இருந்தாலும் எல்லாவற்றையும் தன் நிலையோடுமட்டுமே ஒப்பிட்டு காட்டி, மற்றவர்களை ஒப்புதல்தெரிவிக்க வைக்க முனைபவர். அந்த முறையிலேயே அவர், அவ்வாறு பேசியிருக்கிறார். வேலைக்காரர்களுக்கு மட்டும் மாதம் தொள்ளாயிரம் ரூபாய் கொடுக்கிறேன்; அதை நான் நிறுத்துவதாக இல்லை—என்கிறார். சர்க்கார் சம்பளத்தில் தொள்ளாயிரம் ரூபாய்களை தன்னுடைய பழைய ஊழியர்களுக்கு - தன்னுடைய மாளிகையில் வசிக்கும் வேலையாட்களுக்குக் கொடுக்கிறாராம் ! அதனால்தான், இப்போது மந்திரிகள் வாங்கும் சம்பளம் போதாது என்கிறார்.

பண்டிதநேரு பணக்காரர் - சீமான்-பிரபு ! அந்தப் பிரபுத்வம் கெட்டுவிடக்கூடாது என்பதற்காக மாதம் தொள்ளாயிரம் தருகிறார்; மற்ற மந்திரிகள் எந்த வேலைக்காரர்களுக்குத் தொள்ளாயிரம் கொடுக்கிறார்கள்? எந்த மந்திரி எந்த மாளிகையை விட்டுக் கொடுத்துப் 'பெரிய மனித'ராகியிருக்கிறார் ? நேருவுக்குச் செலவாகிறது என்பதற்காக எல்லோரும் அந்த ரூபாயைப் பெற்றுக்கொள்வதுதான் முறை என்றால், ஆவடியில் பேசித் தீர்த்த 'சோஷலிசம்' எங்கே? வாக்களித்த எழுபது உறுப்பினர்களில் 32 பேர் சம்பளத்தைக் குறைக்க ஒப்புதல் தெரிவித்து விட்டனர். ஆறுபேர்! அவமானச் சின்னங்கள் ! 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' தான் என்ற பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்தி சம்பளப் பிரச்சினையை வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தால் காங்கிரசிற்குப் புதிய ரத்தம் பாய்ச்சியாகிவிட்டது என்றல்லவா மக்கள் நினைப்பர் ! ஆனால் பண்டிதநேரு, தன்னுடைய பேச்சால் சபையைக் கவர்ந்துவிட்டதாக நினைக்கிறார்; தவறு, தவறு! நேருவின் தனிப்பட்ட வீம்பு, அவர் சார்ந்திருக்கும் 'மகாசபை'க்குக் களங்கம் பூசிவிட்டது. ஆவடிக்கு வந்தது இட்லியும் சம்பாரும் சாப்பிடத்தான் என்பதை நிரூபித்துவிட்டது. அவர் காணத் துடித்த சோஷலிச பாணியை, அவருடைய சகாக்கள் விரும்பியும் அவர் ஒப்புக்கொள்ளாததால் தனது லட்சியத்திற்குத் தானே புதைகுழி தோண்டிக்கொண்டார்.

மொத்தத்தில் டில்லி காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம் நேருவை உள்ளூரக் கலங்க வைத்துவிட்டது. வெளிநாட்டில் எதிர்ப்பு! உள்நாட்டில் எதிர்ப்பு ! கட்சிக்குள் எதிர்ப்பு! காகிதப்பூதானே ! வர்ணம் எத்தனை நாளைக்கு நிலைக்கும் ! காற்று, மழை, உஷ்ணம் இவைகளுக்கெல்லாம் தப்பிக்கவேண்டாமா? ★

★ தென்னரசு ★

பலநாள் என்னை வரச் சொல்லி எழுதிக்கொண்டே இருந்த என் நண்பர் நந்தகோபாலின் வீட்டிற்குச் செல்ல அன்று புறப்பட்டேன். அவர் அழகூர் என்னும் கிராமத்தில் வசிக்கிறார். அங்கு அவருக்கு - வசதியாக வாழவேண்டிய அளவு நிலம் இருந்தது. அவற்றைக் கவனித்துக்கொண்டு மனக்கவலையேதுமின்றி வாழ்கிறார். எப்போதாவது அவர் நகரத்திற்கு வருவது உண்டு. வந்தால் வாஞ்சையுடன் என்னைப் பார்த்து விட்டுப் போவார். அவர் என் நண்பராகயிருந்தாலும் என்மேல் அளவு கடந்த பிரியம் வைத்திருந்தார். என்னைவிட வயதில் சிறிது மூத்தவர் எனினும் என்னுடன் நெருங்கிப் பழகுவார். அவருடைய வீட்டு விவகாரங்களையும், அவருடைய மற்றைய விஷயங்களையும் எனக்குக் கூறுவார், அடிக்கடி எழுதுவார். அவரைப் போலவே நானும் என் விஷயங்களையும், வேலையைப் பற்றியும் எழுதுவேன்.

இரவு வண்டி ஏறியவன் காலை அவர் வீட்டையடைந்தேன். நடக்க வேண்டிய காரியங்களெல்லாம் நடந்தன.

உணவு முடித்துக்கொண்டு இருவரும் வந்து திண்ணைமீது அமர்ந்தோம். வெற்றிலை போட்டுக் கொண்டு பேசிக்கொண்டிருந்தோம். எங்கோ ஆரம்பித்து எங்கோ போய்க்கொண்டிருந்தது எங்கள் பேச்சு.

அப்பொழுது "ஐயா! ஐயா!" என்று ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தேன்.

நடுத்தர உயரம், கிழிந்த அழுக்கேறிய உடைகள், பரட்டைத்தலை, தாடியும் மீசையும் வளர்ந்த முகம்- ஆகிய தோற்றங்கள் அவனை ஓர் பிச்சைக்காரன் என்று அறிவித்தது. நல்ல உணவு உண்டு பல நாட்கள் ஆகியிருக்க வேண்டும் அவன்.

உயர்ந்த உணவுகளை உண்டு உல்லாசமாக, சரிகைத் திண்டுகளின் மீது சாய்ந்துக்கொண்டு நளின சிங்காரிகளின் நடனத்தைக் கண்டு களிக்கும் மனித குலத்தின் பாபச்சின்னமான பணக்காரர்களின் நினைவுதான் வந்தது எனக்கு, அந்த ஆண்டவனின் படைப்பில்(?) ஒருவனை ஏழை நின்றிருப்பதைக் கண்டு!

ரோல்ஸ்ராய்ஸ், கெடிலாக், ரோவர் கார்களில் சவாரி செய்கையில் கார் சிறிது குலுங்கினாலும் டிரைவரைத் திட்டும் கோடீசுவரர்களை எனப்படும் கொடிய குணமுடைய வர்களைக் கண்டிருக்கிறேன். பசியால் வாடும் ஏழையரையும் கண்டிருக்கிறேன். இவர்களையெல்லாம் படைத்தது ஒருவனும்! அவன் ஆண்டவனும்!

சிந்தனைக்கு ஓய்வு கொடுத்து விட்டு, அவனை நோக்கி "என்னப்பா வேண்டும்?" என்று கேட்டேன்.

"பணம் காசு வேண்டாங்க. கொஞ்சம் சோறுபோடச் சொல்லுங்க" என்றான்.

என் முகக் குறிப்பைக் கண்ட என் நண்பர் உள்ளே சென்று சோறு அனுப்பினார். அவனை திண்ணை மீதே அமரச் சொல்லி சாப்பிடச் சொன்னேன்.

உண்ட பிறகு அவனிடம் பேச்சுக் கொடுக்கலானேன்.

"என்னப்பா, நல்லாயிருக்கிறியே, ஏதேனும் வேலை செய்வது தானே? என்று கேட்டான்.

நான் கேட்டதற்கு அவன் ஏதும் பதில் கூறாது சிறிதுநேரம் சிந்தித்துக்கொண்டிருந்தான். குழி விழுந்த

சந்திரன் செயல்

அவன் கண்களினின்று கண்ணீர் பொழிய ஆரம்பித்தது.

"ஏனப்பா அழுகிறாய், அழாதே" என்றேன்.

"இல்லை, ஐயா என் கதையைக் கூறுகிறேன் கேளுங்கள். நான் ஒரு துரோகி. அதிலும் குருத்துரோகி, மன்னிக்கமுடியாத துரோகி" என்றான். கூறிவிட்டு அழத் தொடங்கினான். அழுது முடித்ததும் சிறிது ஆறுதல் பெற்றான். பின் தன் கதையைத் தொடர்ந்தான்.

"நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் வாடையூரிலே. அந்த ஊர் இங்கிருந்து பல மைல்கள் இருக்கும்.

வளமான குடும்பத்திலேதான் நான் பிறந்தேன். ஒரே குழந்தை, அதுவும் ஆண் செல்வத்திற்கு கேட்கவேண்டுமா? நான் கேட்டதையெல்லாம் வாங்கித் தர தயங்குவதில்லை என் தாய்தந்தையர்.

என் பெயர் ஏகாம்பரம். ஐந்தாவது வயதிலே பள்ளிக்குச் சென்றேன். துள்ளித் திரிகின்ற காலம் அது. செல்லப் பிள்ளையான எனக்குப் பள்ளிப்படிப்பு கசக்கவில்லை. மாறாக ஊக்கத்துடன் படித்தேன். என்மீது ஆசிரியர்களுக்கெல்லாம் விருப்பம் அதிகம். அவர்களின்

இரா. மதனகோபால் பி. காம்.

தூண்டுதலாலும், என்னுடைய ஊக்கத்தாலும் பக்கத்திலுள்ள பாங்கூர் எனும் சிறு நகரத்திற்கு படிக்கச் சென்றேன். அங்கு செல்லாதிருந்தால் என் வாழ்க்கையே வேறு விதமாக இருந்திருக்கும்.

பாங்கூரிலே நான் படித்துக் கொண்டிருந்தேன். நான் இடைநிலை வகுப்பிலே படித்துக்கொண்டிருந்தேன்.

எங்களுக்கு ஆங்கிலம் எடுக்கும் பேராசிரியர் சுப்பிரமணியருக்கு என்மீது அதிக விருப்பம். அவர் நன்கு படித்தவர். ஆங்கிலத்தில் மட்டுமின்றி தமிழிலும் நல்ல புலமை பெற்றவர். அவர் பாடம் போதிப்பதே ஒரு தனி வகையாகத் தானிருக்கும். மாணவர்கள் மனதில் பதியுமாறு எளிய, அழகான நடையில் அவர் பாடங்களைப் போதிப்பார். அவருடைய வகுப்பில் நான் மிகவும் ஊக்கங் காட்டி வருவேன். அவருடைய அன்பைப் பெற்றவர்களில் நானும் ஒருவன். ஆங்கிலத்தில் நான் முதல்வனாக வர மிகவும் பாடு பட்டேன். அதை அவரிடமும் தெரிவித்தேன்.

இயல்பாகவே என்மீது பிரியம் வைத்திருந்த அவர் என் ஊக்கத்தைக் கண்டதும் அவருடைய இல்லத்திற்கு என்னை வரச் சொன்னார். நானும் போனேன்.

சிறிய வீடாக இருந்தாலும் அவருடையது. நன்கு அலங்கரிக்கப் பட்டு அழகாக இருந்தது. படித்தவனுடைய பண்பாடு அதிலே தெரிந்தது.

முதலில் உள்ள அறையில் என்னை உட்காரச் சொன்னார். நானும் உட்கார்ந்தேன்.

அந்த அறை நடுத்தர அளவில் இருந்தது. ஒரு மூலையில் பெரியதோர் புத்தக அலமாரி இருந்தது. அது நிறைய நூல்கள். அதற்குப் பக்கத்தில் சிறு அலமாரி இருந்தது. அது நிறையவும் நூல்கள் இருந்தன.

என் எதிரே போடப்பட்டிருந்த மேசையின்மீது 'அன்பே கடவுள்' என்று அகிலத்திற்கு அறிவுறுத்திய அறிவுலக மேதை புத்தரின் பளிங்குச் சிலை இருந்தது. உலகப் பெரியார் - உத்தமர் காந்தியாரின் படமொன்று மாட்டப்பட்டிருந்தது.

ஆசிரியர் வந்தார். பாடங்கள் கற்றுக் கொடுத்தார். தெரியாதவைகளைக் கேட்டுக் கொள்ளச் சொல்லி கற்றுக் கொடுத்தார்.

அடிக்கடி நான் அவரிடம் செல்வேன். குறைந்தது ஒரு மணி நேரமாவது கற்றுக் கொடுப்பார்.

★

அன்று நான் சென்றேன். கதவு தாளிடப்பட்டிருந்தது. கதவைத் தட்டினேன்.

சிறிது நேரம் பொறுத்து கதவு திறக்கப்பட்டது. என் முன்னால் வளையொலி கேட்டது. பார்த்தேன்.

அங்கு ஓர் இள மங்கை, வயது இருபது, இருபத்திரண்டு இருக்கும். கொஞ்சம் தள்ளி நின்றாள். இளமையும், அழகும் ஒன்றுதிரட்டி வந்த உருவம் அது. அந்த மெல்லிய வெளிச்சத்திலும் அவள் அழகு பளிச்சென்று தெரிந்தது.

இத்துணை நாள் அவர் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். இத்தகையதோர் உருவம் அங்கு வசிக்கிறது என்று இன்றுதான் கண்டேன். யார் அது?

"வாங்க, உள்ளே" என்றது அந்த உருவம். இல்லை யில்லை. அழகுச் சிலை, பவள உதடுகள் திறந்து முத்து பற்கள் தெரிய இனிய இசை இசைத்தது.

"அப்பா, இல்லீங்களா?" தடுமாற்றத்துடன் கேட்டேன். அவள் சிரித்தாள்.

"இல்லீங்க. உட்காருங்கள். வந்துவிடுவார்" என்று கூறினாள்.

உள்ளே சென்று அமர்ந்தேன்.

சிறிது நேரத்தில் காப்பியும், சிற்றுண்டியும் வந்தது.

"வேண்டாம், இப்பொழுது எதற்குங்க" என்றேன்.

"சாப்பிடுங்க, காபி தானே" என்றாள்.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம். ஆசிரியர் வந்தார்.

"என்ன சந்திரா, நம்ம ஏகாம்பரத்துக்கிட்டே தைரியமா பேசறே. இதோ பார் ஏகாம்பரம், இத்தனை நாள் நான் சந்திராகிட்ட சொல்லிக் கொண்டேயிருந்தேன், ஏகாம்பரம் நம்ப தம்பிதான், வெட்கப்படாமே வா என்று. அவ அதைக் கேட்காமல் உன் எதிரிலே வரத் தயங்கினாள் வெட்கப்பட்டாள். நான் இல்லாததும் நல்லதுக்குத்தான் போலும். இல்லையென்றால் அவ உன்கூட பேசியிருப்பாளா?" என்றார் சுப்பிரமணியம்.

அதைக் கேட்டதும் சந்திரா உள்ளே ஓடிவிட்டாள்.

சிறிது நேரம் பேசிவிட்டு நான் என் ஓட்டலை நோக்கி நடந்தேன்.

ஒரு வாரத்திலேயே சந்திரா என்னிடம் மிகவும் நெருங்கிப் பழகினாள். நானும் அவளிடம் நெருங்கிப் பழகினேன்.

நாங்கள் சிறு குழந்தைகள்போல விளையாடுவதைக் காணும் பேராசிரியர் கள்ளங்கபடமின்றி சிரிப்பார்.

இப்படி விளையாடிய ஒன்றுதான் வினையாக முடிந்தது.

என் கண்ணைக் கட்டி ஓடியாடி விளையாடினோம். ஒரு முறை அவளை நான் பிடித்துவிட்டேன். அவள் தப்பி ஓடாதபடி என் மார்போடு சேர்த்துக் கட்டிக்கொண்டு என் கண்களைத் திறந்தேன்.

தனிமையான இடம். என் உடல் நடுக்கம் கண்டது. கண்களை மூடிக் கொண்டேன். இப்படிப் பலநாள்.

ஒரு முறை இலஞ்சம் வாங்கியவர் மறுபடியும், மறுபடியும் இலஞ்சம் வாங்குவது போன்று நானும் அவளிடம் முறைதவறிப் பழகிவிட்டேன்.

நாங்கள் செய்வது தவறு என்று முதலில் தெரியவில்லை. பின்னர் உணர்ந்தோம்.

எங்கள் இரகசியத் தொடர்பை ஆசிரியர் கண்டுவிட்டார்.

அவர் அறையில் சென்ற நான் ஒரு கடிதத்தைக் கண்டேன்.

அன்புள்ள மாணவ,

நீ செய்தது தவறுதான் என்றும் அதன் காரணகர்த்தா நான் தான். எத்துணையோ பல அறிய நூல்களைப் படித்து, பலருக்கு புத்திமதிகள் கூறும் அளவிற்கு அறிவு பெற்றிருந்த நான் என் வாழ்க்கையில் ஒரே ஒரு தவறு செய்து விட்டேன்.

நான் திருமணம் என்ற 'பெயரில் ஓர் ஏற்பாடு' செய்துக்கொள்ளவில்லை. திருமணமே செய்து கொண்டேன். இருபது வயது நிரம்பாத இள மங்கையை ஐம்பது வயது பெற்ற நான் மணம் முடித்தேன். நம் நாட்டில் பெண்கள் தான் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறார்களே! நானும் ஓர் பெண்ணைத் தேடி மணம் புரிந்துக் கொண்டேன்.

"முதல் இரவன்று அறையின் உள்ளே காலடி எடுத்து வைப்பேன். அவர் அங்கு இருப்பார். கண்டாலும் காணாதமாதிரி இருப்பேன். அன்பே என்பார். அக மகிழ்வேன். அருகில் வருவார். அணைத்தபடி கட்டிலருகில் அழைத்துச் செல்வார். பாலூட்டி பழம் கொடுத்து பாங்கான வார்த்தை பல பேசுவார். முத்தமிடுவார்.

— 5-ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 || 8-6-57 || இதழ் 38

எஸ். ஏ. பி.

அடக்கமுடியாத உரிமைக் கிளர்ச்சிகளேயும், கட்டுப்பாடற்ற சிலரது அடாத செயல்களேயும் ஒடுக்குவதற்கு, கொஞ்சநாட்களாக அரசியலார் எஸ், ஏ. பி. எனும் விசேட ஆயுதந்தாங்கிய போலீஸ் படையை ஏவி வருவது தமிழ்நாட்டுக்கு நன்கு தெரிந்த உண்மையாகும். அவ்வாறு ஏவப்படும் எஸ். ஏ. பி. படையினர் கொஞ்சம்கூட இரக்கமில்லாமல்தான் பொது மக்களிடம் நடந்துகொண்டார்கள். அதையும் தமிழ்மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனல் அந்தப் படையினர், ஏன் பொதுமக்களிடம் அவ்வாறு அரக்கத்தனமாக நடத்துகொண்டார்கள் என்பதற்கு, சர்க்கார் அவர்களேப் படுத்தும் கொடுமையே காரணமாக இருக்கக் கூடுமென்று இப்போது தெரிய வருகிறது.

1947 ல் ஐதராபாத்தில் காசிம் ரஜ்வியின் தலைமையில் நடந்த காட்டுச்செயல்களே ஒடுக்குவதற்காக வேண்டி இந்த எஸ். ஏ. பி. படை தயாரிக்கப்பட்டது. அங்கு சென்று வெற்றி கண்டு திரும்பிய பிறகு இந்தப்படை நிரந்தரமாக்கப்பட்டது. பாதுகாப்புத் துறையில் முக்கிய அங்கமாக இருக்கும் இவர்களுக்கு, மற்ற போலீசார்களுக்குக் காட்டப்படும் சலுகைகள் அளவு காட்டப்படுவதில்லை என்று அவர்களே குறைபட்டுக்கொள்ளும் வகையில் சென்னை அரசியலாரின் மேற்பார்வை இருப்பது உண்மையிலேயே கண்டிக்கத் தக்கதாகும். சென்னை மாநிலத்திலுள்ள மற்ற எல்லா போலீசாருக்குமுள்ள சட்டதிட்டங்களும், கட்டுப்பாடுகளும் எஸ். ஏ. பி. யினருக்கும் உண்டு என்றாலும், மற்ற போலீஸ்களுக்கு உள்ள சலுகைகள் அவர்களுக்கில்லை என்கிறபோது இந்தக் கொடுமையை-நீதியற்ற செயலை-எஸ். ஏ. பி. யினர் பொதுமக்களைப் பல இடங்களில் பலமாகத் தாக்கியிருக்கிறார்கள் என்பதற்காக நாம் கண்டிக்காமல் விட்டு விடுவதற்கில்லை. ஏனென்றால், ஆட்சி மாறும்; மந்திரிகள் மாறுவார்கள்; பாதுகாப்பு இலாகா அச்சாணிபோல இருந்த இடத்திலேயே இருக்கும். நேருவைத் தாக்கிய போலீசார், காமராசரைக் கிண்டல் செய்த அதிகாரிகள் இப்போது அவர்களுக்கு 'சலாம்' போடவில்லையா? அதைப்போல், இன்று மக்களைத் தாக்குவோர், நாளை அந்த மக்கள் தலைவர்களுக்கே பாதுகாப்பாகச் செல்வார்கள். அதுவல்ல இங்கே பிரச்சினை-அவர்களின் குறை நமக்குப் படுகிறது. இருதயமிருக்கிறது - எனவே நாம் கண்டிக்கிறோம்.

என்ன அவர்களது குறைகள்? நமக்குக் கிடைத்த சில உண்மைகளை இங்கே குறிப்பிடுகிறோம்.

எஸ். ஏ. பி. படையில் உள்ளவர்களுக்கு மனைவிமக்களுடன் இருந்து சந்தோஷமாய் வாழவேண்டுமென்ற உரிமை மறுக்கப்படுகிறது. ஆனல் மற்ற சகோதரப் போலீசாருக்கு இந்த உரிமையை அரசியலார் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு அல்லது வீட்டு வாடகை தரப்படுகிறது. எஸ் ஏ. பி படை தயாராகி பத்து ஆண்டுகளாகியும் அவர்கள் மனைவி மக்களோடு இணைந்து வாழ்வதற்கான வீடுகளோ வீட்டு வாடகையோ இன்னும் அரசாங்கத்தாரால் தரப்படவில்லை. இத்துணை துயர்களுக்கிடையில் யாராவது ஒருவர் மனைவிமக்களுடன் இருந்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்று விரும்பி மாத வாடகைக்கு வீடு அமர்த்தி குடும்பத்துடன் வாழ்ந்தால், வீட்டில் செய்யும் சாப்பாட்டை கணவன் சகப்பிடக்கூடாத முறையில் அரசாங்க விடுதியில் தான் சாப்பிட வேண்டுமென கட்டளை விதிக்கப்படுகிறது. அதற்கும் உடன்பட்டு இருந்தால் சாரமில்லாத - சிறிதும் சுவையில்லாத சாப்பாட்டையே வடித்துக் கொட்டுகிறார்களாம்! உணவில் சுவையில்லை என்று உரக்கக் கூவினாலும்கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? சுவையில்லாத உணவை சாப்பிட்டு அனுபவித்தவர்கள் மேலே இருந்தால்தானே! ஏழாவது சுவையைத் தேடிக்கொண்டிருப்போருக்கு, உப்பில்லை என்று கதறுவோரைக் கவனிக்கத்தான் நேரமேது? சர்க்கார் அவ்வாறு வடித்துக் கொட்டும் 'விருந்து'க்காக ரூபாய் இருபதை பிடித்தும் கொள்வதாகச் சொல்லப்படுகிறது. இதனல் அவர்களின் குடும்பச் செலவு எவ்வளவு அதிகமாகிறது என்பதை சர்க்கார் யோசித்துப் பார்க்கத் தவறி விட்டது.

கிடைக்கும் சம்பளமோ ரூ 32. பஞ்சப்படி ரூ 31. மொத்தச் சம்பளம் ரூ 63. கணவன் விடுதியிலும்,மனைவி வீட்டிலும் தனித் தனியாகச் சாப்பிடுவதால் அவர்கள் இருவருக்கு மட்டும் மாதச் செலவு குறைந்தது ரூ 60 பிடிக்கத்தான் செய்யும். அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அந்தக் குடும்பம் அன்னக் காவடிகளாக வேண்டியதுதான். சர்க்காரால் தட்டிக்கொடுத்து வளர்க்கப்பட வேண்டிய ஒரு அணிவகுப்பு, அவர்களுக்கு, சாதாரண மனிதர்களுக்குத் தரப்பட வேண்டிய உரிமைகள் கூட தரப்படாமல் அபகரிக்கப் படுகிறதென்றால் இந்த வெட்கக் கேட்டை யாரிடம் சொல்லி ஒப்பாரி வைப்பது. நவபாரதம் என்று பேசுகிறார்கள், நாமெல்லாம் நீதியின் சாரலில், நேர்மையின் அடிவாரத்தில் நின்று பேசுகிறவர்கள் என்று பெருமையடித்துக்கொள்கிறார்கள் ஆனல் இங்கே மனிதன் மிருகமாக மதிக்கப்படுகிறான். அவமானம்! அவமானம்!!

மனைவியைப் பற்றிய எண்ணங்கள், மழலைக் குழந்தைகளை எண்ணி எழும் ஆசைகள்-நசுக்கப்படுவது, சாதாரணமான - கட்டளைகளால் தடுத்துவிட்டோம் என்று இறுமாந்துவிடுகிற எளிய தவறுகள் அல்ல. பிறநாடுகளைப் போலல்லாமல் வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்துக்கொண்டிருக்கிற தென்னாட்டில், இல்லறம் சிதைக்கப் படுவது ஒரு பெரிய சமுதாயத் திற்கே கெடுவது காட்டும் குறி என்பதை சர்க்கார் மறந்துவிடக்கூடாது. இணைந்து வாழக்கூடிய இரண்டு இளம் உள்ளத்தினர் பிரிக்கப்பட்டால், தத்துவ ஞானிகளின் கணக்குப்படி, அவர்கள் இருவரும் இருவேறு திக்குகளில் சென்றுகெட்டழிந்து போய்விடுகிறார்கள். அதுவும் ஆத்மீகத்தை நம்பிக்கெட்ட இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் இவ்வாறு சீரழிந்தவர்கள் ஏராளம். இந்தச் சீரழிவு எஸ். ஏ. பி. யினரையும் சாடாமலிருக்குமென்பது என்ன நிச்சயம்! அவர்களும் மனிதர்கள்தானே! போலீஸ் இலாகாவைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் மந்திரிமார்களுக்குள்ள சபலங்களெல்லாம் அவர்களுக்கும் இருக்காதா என்ன?

அடுத்தாற்போல், எஸ். ஏ. பி. யினர் நிரந்தரமாக ஒரு இடத்தில் தங்குவதில்லை என்று சொல்லப்படுகிறது. முன்பெல்லாம் ஒரு ஊரில் குறைந்தது ஆறு மாதங்கள் தங்கியிருந்தார்கள். இப்போது அதை மூன்று மாதங்களாக்கிவிட்டார்கள். இதனல் அவர்களுக்கு பெருத்த தொல்லைகள் ஏற்படத்தான் செய்யும். மனைவிமக்களை மூன்று மாதத்திற்கு ஒரு ஊராக அழைத்துக்கொண்டு போவது என்பதும், அவர்களது குழந்தைகளை மூன்று மாதத்திற்கு ஒரு பள்ளிக்கூடத்தில்சேர்த்து விடுவதென்பதும் இயலாத காரியமட்டுமல்ல,சக்திக்கு அப்பாற்பட்டதும்கூட. இதை மாற்றிட கமிஷனருக்குக்கூட அதிகாரமுண்டு.அவர் நினைத்தால்செய்யலாம். முன்னைப்போல் குறைந்தது ஆறு மாதங்களாவது ஒரே ஊரில் தங்கவைக்க, உத்தரவிட அவரைக்கேட்டுக்கொள்கிறோம்.

மூன்றாவதாக, எஸ், ஏ. பி யினரின் பஞ்சப்படிச் சிக்கலைப் பார்ப்போம். எஸ். ஏ. பி. படை வெளியூருக்குச் சென்றால், அவர்களுடன் செல்லும் ஆபீசருக்கு தினசரிப் படியாக ரூ 2-8-0 தரப் படுகிறது. ஆனல் படையினருக்கு தினசரிப் படியாகத் தராமல் மாதம் ரூ 18 கொடுக்கிறார்கள். இந்த ரூ 18 கொடுக்க வேண்டிய மாதங்களில், பிற மாதங்களில் சட்டப்படி சர்க்கார் கொடுத்து வந்த ரூ 31 ல் சரி பகுதியை-அதாவது ரூ 15-8-0 வைப் பிடித்துக்கொள்கிறார்களாம்! இதனல் எஸ். ஏ. பி. படைக்கு என்ன லாபம், உற்சாகம் ஏற்படப்போகிறது! வெளியூரில் அவர்கள் முகாமடிப்பதால் மாதம் ரூ 2-8-0 மட்டுமே அதிகம் கிடைக்கிறது. கொடுமை!

— 5 ம் பக்கம் —

அறிவிப்பு

ஜூன் 1-ம் தேதிய 'தென்றல்' கிடைக்கவில்லை என்று ஐம்பதுக்கு மேற்பட்ட ஊர்களிலிருந்து ஏஜண்டுத் தோழர்கள் வருத்தப்பட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். போன இதழ் ஜூன் 1-ம் தேதி-சனிக்கிழமை தபாலிலேயே சேர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றித் தபால் அதிகாரிக்குப் புகார் செய்திருக்கிறோம் என்பதை ஏஜண்டுத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தைமூரின் காதலி!

— தென்னரசு —

பொதுத்தேர்தல் காலத்தில், இறுதிக் கட்டத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'தைமூரின் காதலி' — சரித்திரக் கதை இந்த இதழில் முன்கதைச் சுருக்கத்தோடு தொடங்கி ஜூலை 6ம் தேதி இதழில் முடிவுபெறுகிறது.

முன்கதைச் சுருக்கம்:

சாமற்கண்டின் தலைவனுன தைமூர் பாதுஷா உலகத்திலேயே பயங்கரவாதியாக கருதப்பட்டு வந்தவன். கடல் கடந்த நாட்டுக்காரர்களெல்லாம் தைமூரின் பெயர் கேட்டு கதிகலங்கியிருந்தார்கள். அப்போது துருக்கியருக்கும் தைமூரின் பெரும்படைக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இந்த யுத்தத்தில் எதிர்பாராதவிதமாக துருக்கியர்கள் தோற்றுவிட்டார்கள். போர்வீரர்கள் பலர் கைது செய்யப்பட்டு தைமூரின் சன்னிதானத்திற்கு இழுத்துவரப் பட்டனர். அவர்களில் துருக்கியச் சேனுபதிகளான **யஜ்தானியும், அபீபுமாவர்.**

தைமூர் அவர்களிடம் மனம் விட்டு வாதித்தான். இளைஞன் அபீபின் வாதம் தைமூரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. அதுவரை அவர்கள்பால் கடுங் கோபம் கொண்டிருந்த தைமூர், அவர்களுக்குத் தனியிடம் தந்து சாமற்கண்டிலேயே இருக்கச் செய்தான்.

தைமூரின் அழைப்பிற்கிணங்க அபீப் தினசரி ராஜசபைக்கு வந்து போனுன். இளைஞன் அபீபை தனது மெய்க்காப்பாளனுக வைத்துக் கொள்ள தைமூர் எண்ணினுன். அவனைக் கேட்டான். ஆனுல் அபீபோ அதற்கு உடன்படவில்லை. பெரிய இடம் ஆபத்து நிறைந்தது என்று மறுப்பதுபோல் நடித்தான். இதுபற்றி வாதம் அபீபுக்கும் தைமூருக்கும் அடிக்கடி நடைபெற்றது. ஆனுல் அபீபுவின் தந்தையான யஜ்தானி, அபீபுவை ராஜசபையில் பணிபுரியக்கூடாதென அடிக்கடி கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

★

துருக்கியின் பிரதம சேனுபதியான யஜ்தானியின் செல்ல மகள் **உம்மதுல்.** அழகி. போர்ப் பயிற்சி பெற்றவள். களம் பல கண்டவள். அவளைப் பெண் உடையில் நாட்டில் உலவவிட்டால் அதனுல் தொல்லைகள் பல குறுக்கிடும் என எண்ணிய யஜ்தானி சிறு குழந்தை முதற் கொண்டே உம்மதுலை ஆண் வேடத்திலேயே வளர்த்து அவளுக்குப் போர்ப் பயிற்சி கொடுத்து வந்தான். வீட்டிலே **உம்மதுல்** என்றும், நட்டிலே **அபீப்** என்றும் அவள் அழைக்கப்பட்டாள். உம்மதுல் பெண்-அழகி என்பதால்தான் யஜ்தானி அவளை தைமூரின் ராஜசபையில் பணிபுரியக் கூடாதென்ருன். ஆனுல் தைமூர், அபீபை ஆண் என்றே எண்ணி, அவனது வாதத்தில் மயங்கி, தன்னுடைய முன்கோபத்தைச்சாந்தப்படுத்த இப்படியொரு இளைஞன் தேவை என எண்ணித்தான் அவனைக் கெஞ்சினுன். இது நாள்வரை தைமூர் வேறு யாரிடமும் அவ்வளவு அன்பாக நடந்து கொண்டதில்லை.

ஒரு நாள் அபீப் பூங்காவில் உட்கார்ந்து, தைமூரிடம் வேலை பார்ப்பதா வேண்டாமா என்பது பற்றி தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான். அந்த வேளை ஒரு அழகான பெண் அந்தப் பூங்காவில் நுழைந்து அபீபோடு பேசத் தொடங்கினுள். அவளைப் பற்றி அபீப் விசாரித்தான். தான் தைமூர் பாதுஷாவின் முதல் மனைவியென்றும், இப்போது அவள் அபீபைக் காதலிப்பதாகவும் சொன்னுள். அபீப் திடுக்கிட்டான்.

(தொடரும்)

— 4ம் பக்கத் தொடர்ச்சி —

குறைந்த உழைப்பின்மூலம் கோபுரம்போல் செல்வத்தைக் குவிக்க இன்றைய உலகத்தில் மனிதவர்க்கம் வழி தேடிக் கொண்டிருக்கும்போது, எஸ். ஏ. பி. யினருக்கு உழைப்புக்கேற்ற ஊதியமே கிடைக்க வழியில்லாதிருக்கிறது. இந்தக்குற்றச் சாட்டை சர்க்கார் புறக்கணிப்பதற்கில்லை. நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பவர்களின் நெஞ்சக்குமுறலை அலட்சியப் படுத்தாமல் உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டுகிருேம். இவ்வளவு துயரங்களுக்கு மத்தியில் உண்மையுள்ளம் கெடாமல், ராஜவிசுவாசத்தை மறந்துவிடாமல் கடமைகளைச் செய்துவரும் அந்தப் படை வீரர்களுக்கு மூன்ருண்டுகளுக்கு ஒருமுறைதான் ரயில் வாரண்டு வழங்கப்படுகிறது. ரயிலுக்குக் கைச்செலவு போடாமல் ஊருக்குப் போக வேண்டுமானுல் மூன்று வருடங்களுக்கு ஒருமுறைதான் அவர்கள் சென்னையிலிருந்து சொந்த ஊருக்கு போகவேண்டும். இடையிலே போக வேண்டுமானுல் சொந்தச் செலவில்தான் போக வேண்டும். மடிப்பிச்சை பெறுவதுபோல் சம்பளம் வாங்கும் அவர்கள் ரயிலுக்கு வேறு ரூ 25, 30 என்று கொடுத்துப் போக முடியுமா? பக்கத்து ஊராக இருந்தால் கவலையில்லை. எஸ். ஏ. பி. யில் இருப்பவர்களே மதுரை, இராமனுதபுரம், திருநெல்வேலி, மலபார் மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் தான். அவர்கள் சென்னையிலிருந்து போவதென்ருல் அவர்களுடைய வருவாய்க்கு அது சாமான்யமான செலவல்லவே! ஆண்டுக்கு ஒரு தடவையாவது அவர்களுக்கு ரயில் வாரண்டு தருவதுதான் முறை! ராஜநோக்கம் எப்படியோ! அதுவும் இப்போது எல்லாம் கனம் பக்தவத்சலம் கையிலிருக்கிறது.

கடைசிக்குறை அவர்களது தங்குமிடத்தைப் பற்றியது. 30 கெஜ நீளமும் 8 கெஜ அகலமுமுள்ள குறுகிய பரப்பிடத்தில் எழுபதுபேர் படுக்க வேண்டுமாம். அவரவர் உடம்பளவுக்குப் பார்த்தாலும் இடம் போதாது. இதில் எப்படிப் படுப்பது, தூங்குவது? இதை எழுதும் போது கல்கத்தா இருட்டறைச் சம்பவம்தான் நினைவுக்கு வருகிறது. இருபது அடி நீளம், இருபது அடி அகலமுள்ள இருட்டுச் சிறைக்கூடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பேரை அடைத்துக் கொன்ருர்கள் வெள்ளையர்கள். அந்தத் துக்கச் சம்பவத்தை இன்னும் சரித்திரம் மறக்கவில்லை.

நல்ல தருணத்தில் நமக்கு எட்டிய செய்திகளை முன்வைத்து சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கிருேம். வாயில்லாப் பூச்சிகளை கௌரவமாக நடத்தாதவர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல. மரியாதை கொடுக்க மறுத்தவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குத்தான் மரியாதை பெறுவார்கள் என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழியை 1857 மெய்ப்பித்துக் காட்டியது. இப்போது நடப்பு ஆண்டு 1957! நினைவிருக்கட்டும்!

★

சந்திரன் செயல்

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

முதலில் நான் தயங்குவேன். பின் சளைக்காமல் நான் அவரைக் கொஞ்சுவேன்." என்றெல்லாம் எண்ணமிட்டு ஏற்றமான எதிர்காலத்தை எதிர்பார்த்திருந்த ஏந்திழைக்கு, உணர்ச்சிகள் அடங்கிக்கொண்டு வரும் ஐம்பது வயது கிழவன் கணவனுக வாய்த்தால்...

அப்போதுதான் அந்த யுவதி பேராசிரியரின் மனைவியென்று எனக்குத் தெரிந்தது. குற்றம் புரிந்த நெஞ்சு கூனிப் போய் விட்டது.

கடிதத்தைக் கண்டதும் நான் செய்த கொடுமையின் தன்மை புலப்பட்டது. ஏதும் தோன்றவில்லை. அங்கிருந்து ஓடினேன். பின் இப்படியே அலைந்து திரிகிறேன்.

அவன் அழுது தீர்க்கட்டும் அப்பொழுதுதான் அவன் துயரமெல்லாம் போகும் என்று காத்திருந்தேன்.

அழுது ஓய்ந்தான் அவன்.

அன்று ஒரு வழக்குப் பற்றிய நினைவு வந்தது. அது அன்றைய தினசரிப் பத்திரிகையில் வந்திருந்தது. சந்திரா எனும் பெண் தற்கொலை புரிந்துக்கொண்டாள் என்று போலீசார் கண்டுபிடித்து வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

ஒருவேளை இவள்தான் அந்த சந்திராவோ என அவனிடம் கூறினேன்.

ஊர், அடையாளம் எல்லாமறிந்து, அவன், அது அவள்தான் என்று கூறினுன்.

★

"ஒரு குற்றமல்ல; இருவர் கொலை செய்யுமளவுக்கு குற்றம் செய்த மாபாவி நான்." என்று அழுதான். அவனை சமாதானம் செய்தேன்.

என்னை மன்னிப்பாரும் உண்டா? மாபாதகம் புரிந்த குருத்துரோகியான எனக்கு மன்னிப்பு உண்டா?"

உண்டு. நம் மக்களுக்காகப் பாடுபடும் மகோன்னத இலட்சியத்தைக் கொண்ட ஒரே ஒரு இயக்கம் தமிழியக்கம். அதில் நீ சேர்ந்து பொதுத் தொண்டாற்று. அதன் மூலம் மன அமைதி பெறுவாய்." என்றேன்.

அதற்கு அவன் இசைந்தான்.

சந்திரனைப் போல் குருப்பத்தினியைக் கெடுத்தவன், செய்த தவறை நினைந்து திருந்தியவன் உயர்ந்த இலட்சியத்திற்காகப் பாடுபடப் போகிருன். ஆனுல் குருப்பத்தினியுடன் கூடிக் குலவி கும்மாளமிட்ட கோணல் நடத்தைக்காரனுன சந்திரன் என்பவன் கடவுளாக்கப்பட்டு நம்மவர்களால் வணங்கப் படுகிருன். ★

நாங்கள் தயார் செய்து வரும் உயர்தர பட்டு, நூல் ஜமக்காளங்களுக்கும், கெட்டிச்சாய பெட்ஷீட்டுகளுக்கும் ஆர்டர்கள் சேகரித்து அனுப்ப நாணயமும், ஊக்கமும் உள்ள கமிஷன் ஏஜண்டுகள் தேவை. தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தாலும் போதும். நிறைய வருமானம் சம்பாதிக்கலாம். டெபாசிட் ரூ. 20 தான்.

— விபரத்திற்கு : —

தி ஞானம் டெக்ஸ்டைல்ஸ்
ஜம்பை போஸ்ட்
(வழி) பவானி (தென் இந்தியா).

★ ‘செங்கோல்’ சிந்தும் நீலிக்கண்ணீர் ★

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

“நானோ, தி. மு. க.வோ, ஈ. வெ. ராவுடன் சேராததற்குக் காரணம், நாங்கள் சேர்ந்த மறுவிநாடியே, நாங்கள் சேர்ந்துவிட்டோம் என்ற ஒரே காரணத்திற்காக அவர் போராட்டத்தை நிறுத்திவிடுவார். அது பட்டுமல்ல, அதற்கு எதிர்மாறாக எல்லோரும் பார்ப்பனர் ஓட்டலுக்குத்தான் போகவேண்டும்- ஏனென்றால் அவை சுத்தமாக இருக்கின்றன என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிடுவார். ஏனென்றால் ஈ. வெ. ரா. அப்படிப்பட்டவர். இதனால்தான் நான் ஈ.வெ.ராவின் போராட்டத்தினின்று ஒதுங்கி நிற்கவேண்டியிருக்கிறது” - என பி. பா. அவர்கள், அவரது இதழில் குறிப்பிட்டிருப்பதை ம. பொ. சிவஞானம் சுட்டிக்காட்டிக் கேட்கிறார், இது தி. மு. க. வின் கொள்கையா என்று. பிராமணாள் அழிப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று எண்ணித்தான் தி. மு க. அதில் கலந்துகொள்ளவில்லை என்று பி. பா. சொல்கிறாரே எனச் சிவஞானம் கேட்கிறார்.

பெரியார் அப்படி நினைப்பார், இப்படிச் செய்வார் என்பதற்காக இதுவரை தி. மு. க. செய்ய வேண்டியதைச் செய்யாமலிருந்ததுமில்லை, செய்யத் தகாததைச் செய்ததுமில்லை. நாட்டின் பொதுப் பிரச்சினைகளில்-மக்கள் பிரச்சினைகளில் வலியச்சென்று கலந்துகொண்ட ஜனநாயப் பேரணி தி. மு. க. என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. இந்தி எழுத்து அழிப்பில் ஆங்காங்கே தி. மு. க. தீவிர பங்கேற்றது; கொடி எரிப்பு அநாகரீகமென்று ஒதுங்கி நின்றது. பிள்ளையார் உடைப்பு, கிருஷ்ணன் பொம்மை உடைப்பு இராமன் பட எரிப்பு, இந்த உடைப்புத் தகராறுகளில் தி. மு. க. கலந்துகொள்ளவில்லை. ம. பொ. சிக்கு இதெல்லாம் தெரியாமலா போய்விட்டது! இதுவரை தி. மு. கழகம் சரியெனப்பட்டதைச் செய்திருக்கிறது. அதற்கு, கோர்ட் கலையும்வரை தண்டனையானாலும், கழுவிலேற்றக் கூடிய தண்டனையானாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராகித்தான் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது. பாவம்! ம. பொ. சி. அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறார். களைப் பெய்திக் கை சோர்ந்து உட்காருவதைத் தவிர வேறு வழியில்லை. பார்ப்பனர்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு வேறு புதிய ஆராய்ச்சிகளை நடத்தினாலாவது ம. பொ. சிக்கு பயனுண்டு. தி. மு. க. வை நாடி பார்ப்பனர்கள் வரும்போது, ம. பொ. சி. பார்ப்பனர்களைத் தேடிப் போகிறார். இதிலிருந்து தி. மு.க. பார்ப்பனர்கள் பற்றிக் கொண்டிருக்கும் திட்டவட்டமான முடிவை இன்னும் அவர் புரிந்துகொள்ளவில்லை என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. எனவே, ம. பொ. சி.க்குத் தெளிவுபடுத்தும் வகையில், 7-4-57 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா பார்ப்பனர்கள் பற்றிக் கூறியதை இங்கே தருகிறோம்:

“வளர்ந்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேருண்மைகளை எனது மதிப்பிற்குரிய பார்ப்பன இளைஞர்களும், அறிவாளிகளும், படித்த வாலிபர்களும் கொஞ்சம் மனதாரச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு நான் பன்னிப்பன்னி பல ஆண்டு காலமாகச் சொல்லிவருகிறேன்; இன்னும் அவர்கள் என்னுடைய பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டுதான் போகிறார்கள்.

“மடாதிபதிகளைக் கண்டிக்கிறோம்- அவர்கள் பார்ப்பனரல்லாதார் என்று தெரிந்தும் கண்டிக்கிறோம்! ஜமீன்தாரர்களைக் கண்டித்தோம்-அவர்கள் பார்ப்பனரல்லாதார் என்று தெரிந்தும் கண்டித்தோம்! ஜஸ்டிஸ் கட்சியைக் கண்டித்தோம்-அதிலுள்ளவர்களெல்லாம் பார்ப்பனரல்லாதார் என்று தெரிந்தும் கண்டித்தோம்!

“பார்ப்பனியத்தைக் கண்டித்தால் அது பார்ப்பனரைக் கண்டிப்பதாகும் என்று கருதி, இன்னமும் நீங்கள் தி. மு. கழகத்தை விட்டு ஒதுங்கி நிற்கிறீர்கள். ஏன் ஒதுங்கி நிற்கவேண்டும்?

“அப்படி ஒதுங்கி நின்றால், அறிவாளிகள் சமூகம் என்று உங்களுக்கு இருக்கிற பெயர் பொய்த்துப்போகும். ஏனெனில் இன்னும் ஒரு 10 வருடத்திற்குத்தான் தி. மு. கழகம் பிறருடைய துணையைக் கேட்டுப் பெறுகின்ற கட்டம் இருக்கும். அதற்குப் பிறகு, பிறருடைய உதவியில்லாமலேயே தி. மு. கழகம் தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் கட்டம் பிறக்கும்.

“அதற்கு 10 வருடத்திற்குப் பிறகு, யாரும் தி. மு. கழகத்தை அண்டி வரவேண்டிய அளவிற்கு நல்ல ஒரு எதிர்காலம் தி. மு. கழகத்திற்கு ஏற்படும்.

“இந்த உள்ள உண்மையை நான், சொன்னால் புரியும் என்ற முறையிலும், சொன்னால் புரிந்துகொள்பவர்கள் இங்கிருக்கின்றார்கள் என்று நான் அறிந்திருக்கின்ற காரணத்தாலும் தெளிவாகச் சொல்கிறேன், இந்த 10 வருடம்தான் நீங்களும், மற்ற சமூகத்தாரும் ஒன்றுபடுவதற்கேற்ற ஒரு காலகட்டம் பிறந்திருக்கிறது. நீங்கள் கடைசிவரையில் பார்ப்பனராகவே இருக்கமுடியும் என்றும் கருதவேண்டாம். அது நடக்கவும் நடக்காது. இன்னமும் ஏன் ஒதுங்கியிருக்க வேண்டும்? அதனால் என்ன இலாபம்? என்ன மதிப்பு வந்துவிடும்?

“ஆகையால்தான், எப்படி ஜப்பான் நாட்டில் சமுரா என்ற வகுப்பார் தாங்களே ஒன்றாகக் கூடி, இனி நாம் தனி வகுப்பு என்றிருக்கிற வரையில் உலகத்தில் ஜப்பானுக்கு மதிப்பு இருக்காது என்று தீர்மானித்து, ஒரே நாளில் சமுரா வகுப்பார் தங்களுக்கு இருந்த பிறப்புரிமைகளையெல்லாம் விட்டுக் கொடுத்து, ஜப்பான் நாட்டு சமுதாயத்தில் இரண்டறக் கலந்தார்களோ அதுபோல், பிராமண வாலிபர் மாநாடு, பிராமண முற்போக்கு வாலிபர் மாநாடு-பிராமணர்களுடைய முன்னேற்ற வாலிபர்கள் மாநாடு என்று இப்படிப் பல பெயர்களில் சேர்ந்தாலும் சரி, பார்ப்பனியத்திலுள்ள கேடுபாடுகளை நீக்க ‘படித்த பார்ப்பனர்களாகிய நாங்கள் முன் வந்திருக்கின்றோம்’ என்று நீங்கள் கிளம்பினாலொழிய உண்மையிலேயே இந்த நாட்டில் வகுப்புகளுக்குள் இருக்கும் மனமாச்சரியமும் போகாது-சமுதாயம் வளராது.

“இந்த சமுதாயம் வளராது இருக்கின்ற வரையில் - தென்னாட்டைப் பொறுத்த வரையில் - பார்ப்பனர் -பார்ப்பனரல்லாதார் பேதம் இருக்கின்ற வரையில் - தெளிவாக திட்டமாக எழுதிக் கொள்ளுங்கள் - வடநாட்டான் காட்டுகிற வழியில்தான் தென்னாடு நடக்கும்.

“பார்ப்பனர் -பார்ப்பனரல்லாதார் பிரச்சினை தீர்க்கப்பட்ட மறு மாதத்தில், வடநாட்டான் தென்னாட்டை அடக்கி ஆள முடியாது என்ற பேருண்மையை வடநாட்டுத் தலைவர்களும் உணர்ந்து கொள்வார்கள்.

“ஆகவேதான், பார்ப்பன நண்பர்கள் இந்தக் கட்டத்தில் செய்யவேண்டிய காரியம் நாட்டுக்காகவும், தங்கள் சமூகத்துக்காகவும், காலத்திற்காகவும், அறிவுக்காகவும் என்றுதான் கருதவேண்டுமே தவிர, வேறெந்தத் தப்புக் கணக்கும் போடக்கூடாது.

“ஆகவேதான், இன்றைய தினம் அவர்கள் தங்களிடையேயுள்ள மனமாச்சரியம் இல்லாமலிருக்கச் செய்ய நல்ல சமுதாய சீர்திருத்தக் காரியத்தில் ஈடுபட்டு, எங்களுடன் இரண்டறக் கலந்து நல்ல முறையில் பணியாற்றினால் நம் வாழ்நாளில் நிச்சயமான பலனைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

“அந்த வகையில் வெளியில் பணியாற்றுவதற்கும், சட்டசபையில் நல்ல காரியங்களைச் செய்வதற்கும், நல்ல பயிற்சி பெற்று: ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கும் நீங்கள் உறுதுணையாக எங்களோடு இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.” ★

ஜூலை 15ல்

தென்றல்

முப்முனைப் போராட்ட மலர்

விலை ரூ. 1-8-0

டெம்மி அளவில்—பளபளக்கும் காகிதத்தில்—ஆர்ட் பேப்பர் மூவர்ணப் படங்களோடு—அற்புதமான முகப்புடன்— நாவலர், பாவலர், அறிஞர்களின் எழுத்தோவியங்களுடன் ஜூலை 14ல் யன்றே எங்கும் கிடைக்கும்!

கண்ணதாசன் எழுதும்
சேரமான் காதலி - முழு நாடகம்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எழுதும்
நெருப்பாறு - குறு நாவல்

பொங்கல் மலரினும் புதுமையாக விளங்கும்!

ஏஜண்டுத் தோழர்கள் எழுதுக!
ஏஜண்டு இல்லாத ஊருக்கு ஏஜண்டு தேவை.
ஜூன் 15லக்குள் முன் பணம் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டுமே மலர்.

முல்லை
ஜூன் 15ல் யன்று கிடைக்கும்
விலை அணா நான்கு

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டு தேவை.
பழைய ஏஜண்டுகளே பாக்கிகளையும் அனுப்பி, டெபாசிட்டையும் புதுப்பித்துக்கொண்டால் அவர்களே புதிய ஏஜண்டுகளாகக் கருதப்படுவார்கள். இல்லையேல் ஏஜன்ஸி மாற்றப்படும்.

புதிய முறை! புதிய புகைப்பட அட்டை!
கண்ணதாசன் எழுதும் சிறு காவியத்தோடு!

தென்றல்)
முல்லை) :: சென்னை 6.

எனக்கும் உனக்கும் என்ன உறவு?

நான் கிழவன். வாழ்க்கையின் பெரும் பகுதியை உன் அணைப்பிலேயே கடத்திவிட்டவன். இனிமேலும் இந்த உடல் உணர்வற்றுப் போகும்வரை உன்மீதுள்ள பாசத்தைத் துறக்க முடியாதவன். ஏன் இது உனக்குத் தெரியாதா? உன் உரசலினால் தழும்பேறிப் போன இந்த விரல்கள் வயோதிகத்தினால் மட்டுமல்ல, வறுமையினால் நடுங்கிய நிலையிலுங்கூட உன்னை நழுவவிட்டதில்லையே!

எப்போதோ சில சமயங்களில், உன்னையும் பிரிந்து தனிமையில் தத்தளிக்கும்போது, நீ என்னுடன் வளர்த்துக்கொண்ட உறவைப்பற்றிச் சிந்திப்பதுண்டு. முடிவில் அது உன்னைப்பற்றிய சிந்தனைகளாக இல்லாமல், என்னைப்பற்றியதாக, என் கடந்த கால வாழ்வின் நிழலோட்டமாக அமைந்துவிடும்! அதை உன்னிடம் கூட நான் இன்றுவரை சொல்லத் துணிந்ததில்லை. என் வாழ்வும் தாழ்வும் உன்னோடு பின்னிக் கிடக்கும்போது, அதன் தொல்லையும் துயரும் நீ அறியாததல்ல; அதை மீண்டும் ஞாபகப்படுத்தும் வேதனை தீண்டும் விளையாட்டை நான் விரும்பவில்லை.

ஆனால் உனக்குத் தெரியாமல் என் நினைவுகள் எதைத்தான் என்னால் மறைக்க முடிந்தது?

அப்பொழுது நான் சிறுவன், உலகமறியாதவன், உன் உருவத்தையன்றி என் உள்ளத்திற்கும் உனக்கும் ஏற்படப்போகும் பிணைப்பை அறியாதவன்! உன்னை என்னோடு நிர்ப்பந்தமாக இணைத்துவைக்கச் சிலர் முயன்றபோது கூட, நான் பயந்துஓடியிருக்கிறேன். உன்னை வெறுத்திருக்கிறேன். உன் பிடிப்பிலிருந்து விடுவித்துக்கொள்ளத் துடியாய் துடித்திருக்கிறேன்! அதுவெல்லாம் அப்போது, என் மனம் அரும்பாக இருந்த நிலையில், மலர்ச்சியின் மகிழ்வை மனத்தாலும் உருவாக்கிப் பார்க்க முடியாத நாளில்!

அதன்பிறகு, நான் உலகைப் புரிந்துகொள்ளத் தொடங்கியபோது, மனக்கிளர்ச்சிக்குக் கண்கள் காரணமாகிவிடும் பருவமடைந்த பிறகு, உலகோடு ஓடாமல் உலக ஓட்டத்தை உன்னித்துப் பார்க்கும் உணர்வாளனாகிவிட்ட பிறகு, பற்றி இழுக்கும் பார்வையும், பால் வடியும் வதனமும், பாதை ஓரத்துப் பிச்சைக்காரக் கூட்டமும், கண்வழியே புகுந்து, கருத்தைக் கொந்தளிக்கும் கடலாக்கி விட்டன. குமுறும் எண்ணங்களை எங்காவது கொட்டித் தணிக்க எத்தனித்தேன். அப்போது எவருமே என்னருகில் இல்லை. மனிதக் கண்கள் திரும்புகிற திக்கெல்லாம், என் எண்ணங்களைக் கொட்டி வைத்தேன். அவர்கள் சிரித்தார்கள்; சினங்கொண்டார்கள்; என் பேச்செல்லாம் பிதற்றல் என்றார்கள், ஏன் என்னையே பித்துக்குளி என்று எள்ளி நகைத்தார்கள்! எவர் எவரிடமோ ஆறுதல் தேடி ஏமாற்றமடைந்த பிறகு, எதுவுமே பேசாமல் மௌனமாகிக் கிடந்த உன்னைப் பார்த்தேன்; "ஏன் பேச்சை நிறுத்துவிட்டாய்" என்பதுபோல் நீ என்னைப் பார்த்தாய்.

மீண்டும்பேசத்துவங்கினேன். அதே வேகத்தில், அதே உணர்வு மழுங்காமல், இன்றுவரை பேசிக்கொண்டே இருக்கிறேன். நீ கேட்கச் சலிக்கவில்லை; நான் பேசிக் களைத்துவிட்டேன். என் கரங்கள் தளர்ந்து விட்டன. உன் மீதிருக்கும் என் பிடிப்பும் தளர்ந்துவிடுமோ என்று கூட அஞ்சுகிறேன். ஆனால் நீ மட்டும், என் பரந்த வாழ்க்கைக் காலத்தின் துவக்கத்தில் இருந்தது போலவே உணர்வுக்கு விளிம்பு கட்டிய விரக்தி நிலையில், என்னை விட்டகலாமல் என் எண்ணத்தைப் பிரதிபலிப்பதே உன் லட்சியமென்று கொண்டு விட்டாய்.

என் எண்ணத்திலே உண்மை இருப்பதாக, கவர்ச்சி இருப்பதாக, உயிர் இருப்பதாக எப்போதோ சிலர், எதற்காகவோ சொல்லும்போது, நான் இறுமாப்படைந்துவிடுவேன். நீ அதைப் பொருட்படுத்தியதே இல்லை. பித்தனின் பிதற்றல் என்று பலர் கூறும்போது, நான் நாணித் தலை குனிந்து வேதனையடைந்திருக்கிறேன். அப்போதும் நீ உன் நிலை தளர்ந்ததில்லை. அதே மௌனத்தோடுதான் சகித்துக்கொண்டிருந்திருக்கிறாய்.

என்பொருட்டு எதையும் ஏற்கத் துணிந்துவிட்ட, உன்னை நினைத்து நினைத்து நான் வியப்புறுகிறபோது, உலகத்தாரின் உன்னைப்பற்றிய விமர்சனமும் என் உள்ளத்தில் ஒலிக்கத்தான் செய்கிறது. எதைப்பற்றியும், ஏதாவது சொல்லியாக வேண்டும் என்ற நியதியை வகுத்துக்கொண்ட அவர்கள் உன்னை "உயிரற்ற பொருள்" என்கிறார்கள். என்னை யாருமற்ற அனாதையாக்கி விடும் அந்த முடிவை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

ஆனாலும் உன்னையே கேட்கிறேன், என்னைப்பற்றி எல்லாம் தெரிந்துகொண்டும், உன்னைப் பற்றி ஒரு வார்த்தையும் சொல்லாத நீ இந்த ஒரே ஒரு கேள்விக்கு பதிலளிப்பதின் மூலமாவது எனக்கு நிம்மதியளித்துவிடு. உனக்கும் எனக்கும் இடையே உள்ள அழுத்தமான உறவு, "நீ ஒரு மிகச் சாதாரண எழுதுகோல், நான் எண்ணத்தை வடித்தெடுக்கும் ஓர் பஞ்சை எழுத்தாளன்" என்பது மட்டும்தானா?

—"தேசி"

சுவாமியே ஜவகர், சரணம்! சரணம்!!

டில்லியில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டத்திற்கு காமராசர் போயிருந்தார்; சுப்ரமணியம் போயிருந்தார். டி. டி, கிருஷ்ணமாச்சாரி போயிருந்தார். தமிழ் தினசரிகளிலெல்லாம், இந்த மூவரும் வடநாட்டதிபர்களோடு உட்கார்ந்திருந்தபோது எடுத்த படம் பிரசுரிக்கப் பட்டிருந்தது, [அந்தப் படத்தைப் பார்த்தால், வடநாடு - தென்னாடு கலாச்சார வேறுபாடு தெளிவாகத் தெரியும்.] அந்த அளவு முக்கியத்துவம் பெற்ற தமிழ்நாட்டு தேசீயத் தலைவர்கள் அங்கே என்ன பேசினார்கள்? நேருவுக்கு நெருங்கிய நண்பர்கள்கூட நேருவின் கருத்தை எதிர்த்திருக்கிறார்கள். உ. பி. யைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள்கூட நேருவின் திட்டங்களை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். ஆனால் காமராசர்? பசுபோல் இருந்துவிட்டு வந்திருக்கிறார்! இத்தனைக்கும் இப்பொழுது நடைபெற்று முடிந்த டில்லிக் கூட்டத்தில்தான் காங்கிரஸ் உறுப்பினர்கள் துணிந்து பேசியதாகப் பேசிக்கொள்ளப் படுகிறது. அந்தக் கூட்டத்தில்கூட காமராசர் வாய்திறந்து பேசவில்லை. பேசவில்லையென்றால்,'திராவிட நாடு திராவிடருக்கே' என்று பேசச்சொல்கிறோம்!இல்லை!'ஐயா பிரதமரே! வெளிநாட்டிலாகாவை வைத்துக் கொண்டிருப்பவரே, இலங்கைத் தமிழர்கள் பற்றி ஒரு நிலையான முடிவு கட்டுங்கள்'' என்றாவது பேசினாரா? ஆண்டுதோறும் தாடி வளர்த்து, ஆடி மாதம் வந்ததும், பட்டினி கிடந்து காடு, மலை தாண்டி, ,'சுவாமியே சரணம் ஐயப்பா!'' என்று கூவிக் கொண்டு பாலக்காடுப் பகுதி நோக்கி ஓடும் பக்தனைப் போல் அல்லவா தமிழ்நாட்டுத் தலைவர், டில்லி போய் 'நேரு பெருமானை' வணங்கி நிற்கிறார். இவர்களா இலங்கைத் தமிழர்களைக் கவனிப்பார்கள்! இவர்களா 'தமிழ்நாடு' எனப் பெயரிடுவார்கள்! இவர்களா 'பாவாடை. நாடா'வைத் துண்டிப்பார்கள்!

டாக்டர் பஞ்சம்!

சென்னையில் பரவியிருக்கும் விஷக்காய்ச்சலையொட்டி ஒரு சுவையான நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

காலை வேளை—ஏழு மணி இருக்கும்—பேராசிரியர்... படுக்கையை விட்டு எழுந்தார். வீட்டுக்கு வெளியே 'சலசல' வென்று பேச்சுக்குரல் கேட்டது. எழுந்து வந்து பார்த்தார். வீட்டு வாசலில் குழுமியிருந்தவர்கள் அத்தனை பேரும் விஷக்காய்ச்சல் கண்டவர்கள். பேராசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை.

"எனக்கு வைத்தியம் தெரியாதே! அடுத்த தெருவில் இருக்கிறார் டாக்டர், போய்ப் பாருங்கள்" என்று கனிவோடு சொல்லியனுப்பினார் பேராசிரியர்.

நோய் கண்ட பெருமக்கள் அனைவரும் ஏமாற்றத்தோடு திரும்பினார்கள்.

ஒரு நாளுமில்லாமல். எப்படி, ஏன் இவ்வளவு கூட்டம் இங்கே வந்தது?—என்று பேராசிரியர் ஆராயத் தொடங்கினார். மனைவியைக் கேட்டிருக்கிறார். அந்த அம்மையாருக்கும் ஒன்றும் புரியவில்லை. அப்போது அவரது மகன்—எட்டு வயதுச் சிறுவன் ஓடிவந்தான்.

"ஏப்பா, நீ யாருக்கும் வைத்தியம் பார்க்கிறதில்லையா? எங்கே பார்த்தாலும் விஷக்காய்ச்சல் என்று சொல்கிறார்களே" என்றான்.

"எனக்கென்னடா தெரியும் கண்ணே! நானென்ன டாக்டரா?" என்றார்.

"இல்லே நீ பொய் சொல்றே, நீ டாக்டர்தான்! வெளியிலே போட்டிருக்கே டாக்டர் குமரேசன் பி. எச். டி. என்று" என்றான் பாலகன்.

பேராசிரியருக்குத் தூக்கி வாரிப் போட்டது. வெளியிலே போய்ப் பார்த்தார். அவருடைய பெயர் எழுதிய விளம்பரப் பலகைதான் அத்தனை கூட்டத்தையும் கூட்டி வைத்திருக்கிறது என்று அறிந்து மனதிற்குள்ளேயே சிரித்துக்கொண்டார்.

சென்னையில் இப்போது விஷக்காய்ச்சல் கண்டவர்கள் டாக்டர்களைத் தேடி அலைவதால், இன்னும் சில நாட்களுக்கு இந்தப் பலகை வெளியிலிருப்பது ஆபத்து என்று எண்ணி அந்தப் பலகையை அவர் உள்ளே எடுத்துப் போய்விட்டார்! ★

பதிவு எண்: எம். 6529 8-6-57 தென்றல்

புலவர் படும் பாடு!

அவர் ஒரு புலவர். கல்வியைப் பெரிதாக எண்ணியவர். அதன் காரணமாகக் கல்வியை அதிகமாகக் கற்றிருந்தார் அவர். அவ்வாறு கற்றிருந்ததைப் பெருமையாகக்கூட அவர் கருதினர். கல்வி அதிகமாகக் கற்றிருந்தார் என்கிற காரணத்தினுல் வறுமை அவரை விட்டு விட்டதா? இல்லை! அவரைப் படாத பாடுபடுத்தியது. எதற்கும் கலங்காத அவரது உள்ளத்தைக் கலங்கச் செய்தது. 'கல்வி கற்றது பெருந்தவறு' என்றுகூட அவரை எண்ணச் செய்துவிட்டது. பாவம்! புலவர் மனம் நொந்தார். அவரது உள்ளத்தில் உள்ள துன்பத்தை வெளியே கொட்ட முனைந்தார். அவரும், எவ்வளவோ அடக்கித்தான் பார்த்தார், முடியவில்லை. அவரது மனம் எண்ண, எண்ண அந்த எண்ணத்தைத் துடிப்புடனும் துக்கத்துடனும் வெளியிட்டது.

"அட பேதை நெஞ்சமே! நீ கெட்டுவிடுவாய்! உலகத்தில் எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. அதையெல்லாம் விட்டுவிட்டோம். இந்தப் பாழும் தமிழைப் படிப்பது உயர்வு என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டோம். அதைப் படித்து ஏமாந்தோம். அதைப் படித்துப் பாழாய்ப் போனதை விட வேறு காரியங்கள் செய்து நலமாக வாழ்ந்திருக்கலாம். சுருக்கமாய்ச் சொன்னால், கழைக்கூத்தாடச் சென்றிருக்கலாம். இல்லை, செப்பிடுவித்தைகள் செய்யவாவது கற்றிருக்கலாம். அது இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம், ஆடவரை மயக்கி ஏமாற்றும் பரத்தையாகவாவது பிறந்திருக்கலாம். இல்லாவிட்டால், இந்தச் சனியன் போன்ற தமிழ்மொழியை விட்டு, பெண்களுக்குத் தூதுசெல்லும் வேலை செய்தாவது பிழைத்திருக்கலாம். இதுபோன்ற செயல்களில் ஒன்றைக்கூடச் செய்யாமல், உண்மையிலேயே நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டோமே! நமது வாழ்வைப் பாழாக்கிக் கொண்டோமே! சீ! இந்த மாதிரிப் பிச்சை எடுத்து வாழுகின்ற நமது பிறவியும் ஒரு பிறவியாகுமா?".

-புலவர் தனது உள்ளக்கிடக்கையை வார்த்தைகள் மூலம் வடித்துக் காட்டிவிட்டார். சரியான தமிழைக் கற்றதாக அவர் வருந்தும்போது புலமைக்கு எவ்வளவு தூரம் புறக்கணிப்பு ஏற்பட்டிருந்தது என்பதை எளிதில் அறிய முடிகிறது. அதே நேரத்தில், கழைக்கூத்தாடிகள், செப்பிடுவித்தைக்காரர்கள், வேசையர்கள் முதலியோர் ஊரையும் உலகத்தையும் எவ்வளவு தூரம் ஏமாற்றி வாழ்கிறார்கள் என்பதையும், அந்த வாழ்வு பாழும் மனித சமுதாயத்தில் எந்த அளவுக்கு வசதியுள்ளதாக அமைந்துவிட்டிருக்கிறது என்பதையும் புலவர் படும்பாடு நமக்குத் தெரிவிக்கிறது. புலவர் பாடிய பாடல்:

அடகெடுவாய் பலதொழிலு
மிருக்கக்கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ
மறிவில்லாமல்
திடமுளமோ கனமாடக்
கழைக்கூத்தாடச்
செப்பிடுவித் தைகளாடத்
தெரிந்தோமில்லை
தடமுலைவே சையராகப்
பிறந்தோமில்லைச்
சனியான தமிழைவிட்டுத்
தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று
பிழைத்தோமில்லை
என்னசென்ம மெடுத்துலகில்
லிருக்கின்றேமே.

☆

இன்னொரு புலவர். இவரும் வறுமையை உடன்பிறப்பாகக் கொண்டவர்தான். எனவே பரிசில் பெறுவதற்காகச் செல்வரைத் தேடிப் புறப்பட்டார். எங்கெங்கோ அலைந்தார். இறுதியில் ஒரு செல்வரைக் கண்டு பிடித்துவிட்டார். புலவரைக் கண்ட அந்தச் செல்வர், "ஐயாவே! வருக! தாங்கள் யார்?" என்று கேட்டார். "நான் ஒரு புலவர்"-புலவர் பதில் தந்தார். அவ்வளவுதான், செல்வரின் வாய் குழறியது. தேகமெல்லாம் வியர்த்தது. மூச்சு மேலும் கீழும் இழுத்தது. நாடி நரம்புகள் வேகமாக அடித்துக் கொண்டன. 'மதிமோசம் வந்து விட்டதே' என்று அவரது உள்ளம் கதறியது. ஒரு வழியாகச் சமாளித்துக்கொண்டார். "சரி! வந்த காரியம் என்ன?" என்று புலவரை வினவினர். உடனே புலவர் செல்வரைப் புகழ ஆரம்பித்தார். "சீர்மிகுந்த காமதேனுவே! சிறப்புமிகும் கற்பகத் தருவே! சிந்தாமணியே! செஞ்சொல் பகர் அரிச்சந்திரனே..." இப்படியாக ஆரம்பித்தார் புலவர். அதற்குள் செல்வர் முகஞ் சுளித்தார். அவரது கண்கள் சிவந்தன; கனலை அப்படியே கொண்டு வந்து தள்ளின. புலவர் மறுபடியும் தொடர்வதற்குள் செல்வர் தாமேபேச ஆரம்பித்துவிட்டார்.

"என்னய்யா? யாரைப் பார்த்து மாடு, மரம், கல் என்றெல்லாம் சொல்கிறீர்? நான் என்ன மாடா? இல்லை மரமா? இல்லை கல்லா? என்னைப் பார்த்து அரிச்சந்திரன் என்று சொல்கிறீரே? உமக்கென்ன பித்தமா? நான் யாருக்கு அடிமையானேன்? யாருக்கு என் பெண்டாட்டி பிள்ளைகளை விற்றேன்? நன்றாக இருக்கும் என்னை ஏனய்யா கன்னாபின்னா என்று திட்டுகிறீர்? இந்த வசை எப்படி ஐயா மறையும்?" - இப்படி 'அபஸ்வரத்தில்' அலற ஆரம்பித்துவிட்டார் அந்தச் செல்வர். புலவர், காமதேனு என்றது அவருக்கு மாடு என்று சொன்னதாகப் பட்டுவிட்டது. கற்பகத்தரு என்று சொன்னது அவருக்கு மரமாகப் பட்டுவிட்டது. சிந்தாமணி என்று சொன்னது கல்லாகப் பட்டுவிட்டது. இவற்றுக்கெல்லாம் மேலாக அரிச்சந்திரன் என்று சொன்னதைக் கேட்டவுடன், தன்னைக் குறை கூறியதாக எண்ணிக் கொண்டார் செல்வர். உண்மையில் அந்தச் செல்வர் தவறாகப் பொருள் கொண்டாரோ, அல்லது புலவரை ஏமாற்றி அனுப்பவேண்டும் என்ற எண்ணத்தில்தான் புலவரின் பாடலுக்கு விபரீதமாகப் பொருள் கொண்டு அவரை விரட்டியடித்தாரோ என்னவோ, அது அந்தச் செல்வருக்குத்தான் வெளிச்சம்! அதற்குப் பின்னும் புலவர் அங்கு இருக்கவில்லை. இவ்வாறு விபரீதமாகப் பொருள் காணும் தீயவர்களையும் பாட நேர்ந்ததே என்று தன்னை நொந்து கொண்டு திரும்பினர். அவர் பாடிய பாடல் இது:

வாருநீர் யாரென்ன வித்துவா
னென்னவு
மதிமோசம் வந்ததென்றே
வாய்குளறி மெய்யெலா
மிகநடுக் குற்றுநீர்
வந்தகா ரியமேதெனச்
சீருலா வியகாம தேனுவே
தாருவே
சிந்தாம ணிக்குநிகரே
செப்புவச னத்தரிச்சந்த்
ரனே யெனலும்
சினந்திருக ணுஞ்சிவந்தே
யாரைநீ மாடுகல் மரமென்று
சொன்னதுமலா
லரிச்சந்திர னென்றே
யடாதசொற் சொன்னேயே
யார்க்கடிமை யாகினே
னார்கையிற் பெண்டுவிற்றேன்
தீருமோ விந்தவசை
யென்றுரைசெய் வெகுகொடிய
தீயரைப் பாடி நொந்தேன்
....
....

☆

மற்றொரு புலவர். இவரது வாழ்க்கையில் துன்பம் அணிவகுத்து வந்தது. இவர் துன்பத்தின் சிகரத்தையே எட்டிப்பிடித்தவர். இடுக்கண் என்ற சொல்லுக்கு இலக்கணமாக அமைந்துள்ளது இவர் பெற்றதுன்பம். புலவரின் வீட்டிலே உள்ள பசு கன்றுக்குட்டியைப் பெற்றது. அந்த நேரத்திலே அதற்கு உதவி செய்ய முடியாதபடி மழை வேறு பெய்து தொலைத்தது. ஏற்கனவே ஆட்டம் கொடுத்துக் கொண்டிருந்த அவரது குடிசை வீடு அந்த மழையிலே 'பொதுக்' கென்று விழுந்துவிட்டது. இந்த நிலையிலே வீட்டு வேலையாள் நோயிலே விழுந்துவிட்டான். நிலத்தில் வேலை செய்தவனே இறந்துவிட்டான். நிலத்தில் உள்ள ஈரம் காய்ந்து போய் விடுமே என்று எண்ணி விதை விதைக்க அவர் ஓடினர். அப்போது, போகும் வழியிலே கடன்காரர்கள் முன்பு பட்ட கடனை "இப்போது தந்துவிட்டுப் போ" என்று மறித்துக் கொண்டார்கள். அப்போது, எதிரே யாரோ இறந்துபோன செய்தியை ஒருவன் கொண்டு செல்கிருன். அதே சமயத்தில் தவிர்க்க முடியாத விருந்தாளி ஒருவர் வந்தார். போதாததற்கு வீட்டிலுள்ள ஒருவரைப் பாம்பு தீண்டிவிட்டது. அதைத் தொடர்ந்து அந்த நேரத்தில் அரசனின் அதிகாரிகள் நிலவரி கேட்க வந்தார்கள். இந்தத் துன்பம் போதாததற்கு குருக்கள் வேறு வந்து தட்சணையைக் கொடு என்று விடாப்பிடியாகநின்ருர். இத்தனை துன்பத்தையும் ஒரு சேரத் தாங்கிய புலவரை எண்ணும் போது நமக்கு அனுதாபம் பிறக்கிறது. புலவர் படும் பாட்டை எண்ணி மனம் நோகிறது. புலவரின் துன்பச் சிகரம் அமைந்த பாடல் இது:

ஆவின மழைபொழிய
இல்லம் விழ
அகத்தடியாள் மெய்நோவ
அடிமை சாவ
மாவீரம் போகுதென்று
விதைகொண் டோட
வழியிலே கடன்காரர்
மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன்
எதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச்
சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட
கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள்
கொடுவென் ருரே!

தமிழ் இலக்கியப் பரப்பிலே பல புலவர்கள் பட்ட பாட்டைப் பெரிதும் காணலாம். இவர்களது பாடு சமுதாயத்தை வாழ்விக்க உதவி செய்ததும் உண்டு.

—தமிழ்ப்பித்தன்.

சிறப்புக் கூட்டம்
9-6-57 ஞாயிறு காலை 9 மணி
கோகலே மண்டபம்
தலைவர்:
க. அறிவழகன், எம். ஏ.
பேச்சாளர்கள்:
கண்ணதாசன்
(உலகம் இவ்வளவுதான்!)
நாஞ்சில் கி. மனோகரன், எம். ஏ.
(அபாய அறிவிப்பு)
தஞ்சை டி. கே. சீனிவாசன்
(தத்துவ வரலாறு)
நன்கொடை:
ரு. 1, அணு எட்டு.
—சிந்தனையாளர் கழகம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.